கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன், அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். சங்கீதம் 34:1

தென்னிந்திய திருச்சபை, திருநெல்வேலி திருமண்டலம்

# புனே சேகரம்

ஏப்ரல் - 2021 செய்தி மலர் - 6

# பெதஸ்தா C.S.I. ஆலயம்





## Rt.Rev.Dr.D.Chandrasekaran

# பிரதம பேராயரின் ஆணையாளரிடமிருந்து.....

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்...

லெந்து காலம் முழுவதும் ஜெபம், உபவாசம், தியானம் மற்றும் நற்செயல்களைச் செய்கின்ற நாட்களாய் அமைகிறது. கடவுள் படைத்த மனிதனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையால் பாவம் உலகத்தில் பிறந்து (ரோமர் 5:12) பாவத்தின் சம்பளமாகிய மரணமும் உலகத்தில் வந்தது (ரோமர் 6:23). இதனால் ஆண்டவருக்கும் மனுக்குலத்திற்கும் இடையே விரிசல் உண்டானது. எனவே விழுந்துபோன மானிடரை மீட்கும்படியாக தம்மையே சிலுவையில் ஒப்புக்கொடுத்த மனுஷகுமாரனின் மீட்பின் திட்டத்தை இந்த லெந்து காலங்களில் நினைவுகூறுவோம்.

காலம் காலமாய் நம்மை பாவம் துரத்திக்கொண்டிருந்தாலும், கடவுளின் தியாகமும், அவர் நம்மேல் வைத்த அன்பும், கிருபையும் நம்மைக் கடவுளுக்கு முன்பாக தகுதிப்படுத்திக் கொண்டேயிருக்கிறது. நம் குற்றங்கள் நம்முடைய தலைக்குமேல் போய் தாங்கமுடியாத சுமையாக நம்மை வெகுவாய் அழுத்துகின்ற போதுதான் உணர்வடைகிறோம். நம்மைப் போல எண்ணற்ற மனிதர்கள் தங்களுடைய மனதையும், சரீரத்தையும் கறைப்படுத்தி பாவப்பிடியில் இருந்து மீளமுடியாமல் அன்றாடம் வேதனைகளில் சிக்கித்தவிக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் ஊழியத்தை ஆரம்பிக்கும் பொழுதே பிசாசானவன் சோதனையை கொண்டு வந்தான். ஆனாலும் இயேசு கிறிஸ்து சோதனைகளையெல்லாம் சிலுவை பரியந்தம் மேற்கொண்டு வெற்றி சிறந்தார். கிறிஸ்து இயேசுவின் முழுசிந்தையும், செயலும் மனுக்குலம் மீட்பு அடையவேண்டும் என்பதாகவே அமைந்தது. நம்மை மீட்பதற்காக அவருக்கு ஏற்பட்ட சிலுவை பாடுகளை நிந்தையாய் எண்ணாமல் மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார். அப்பாடுகளின் வழியாக ஏற்பட்ட மீட்பின் திட்டத்தை கண்டு திருப்தியடைந்தார். இந்த லெந்து காலத்தில் நாம் இயேசு கிறிஸ்துவின் பாடு மரணத்தை அதிகமாக தியானம் செய்து அதன் மூலமாக அவரின் தரிசனத்தை பெற்றுக்கொள்வோம்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உலகம், மாமிசம், பிசாசின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை மீட்கும்படியாக, வந்த இயேசுவினிடத்தில் நம் பாவங்களை, குற்றங்களை அறிக்கையிட்டு மனந்திரும்புவோம். கர்த்தர் நம்முடைய பாவச் சுமையை நீக்கி இந்த லெந்து காலங்களை ஆவிக்குரிய வாழ்வில் துளிர் விடும் வசந்த காலங்களாக மாற்றுவாராக.

கிருபையும், சமாதானமும் பெருகுவதாக.

கிறிஸ்துவின் பணியில்,

பிரதமபேராயரின் ஆணையாளர்

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவவர்களே,**

ஒருவரும் பூட்ட கூடாதபடி திறக்கிறவரும் திறக்க கூடாத படி பூட்டுகிற மாகிய இயேசு கிறிஸ்துவின் இனியநாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்..சென்ற மூன்று மாதமும் வழிநடத்தி நான்காவது மாதத்தை கானச் செய்த நம் தேவாதி தேவனுக்கு துதிகளை செலுத்துவோம்.

"கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன், அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்". சங்கீதம் 34:1

வாழ்வில் பள்ளங்களோ மேடுகளோ, பாதகமோ சாதகமோ, வெற்றியோ தோல்வியோ என்ன நேர்ந்தாலும் என் தேவனுடைய அனுமதி இல்லாமல் எதுவும் என் வாழ்வில் நடப்பதில்லை என்ற தெளிவு நம்மிடம் இருந்தால் மாத்திரமே கர்த்தரை நாம் எக்காலத்திலும் துதிக்க முடியும். சங்கீதக்காரன் சொல்கிறான், தேவனை துதிக்கும் துதி எப்போதும் என் வாயிலிருக்கும் என்பதாக. ஆனால் நாம் இன்று எப்படி இருக்கிறோம்? ஒரு சிறு பிரச்சனை வந்துவிட்டாலும் சோர்ந்து புலம்புகிறோமே தவிர தேவனை துதிக்கிறோமா? அல்லது தேவனை தூஷிக்கிறோமா? எல்லா சூழலிலும் துதிப்பவனுக்கு என்றும் வெற்றியே.



மகாராஷ்டிரா மாநிலத்தில் ஒரு கிராமத்தில் ஒரு ஏழை மாணவன் இருந்தான். அவன் அந்த கிராமத்தில் உள்ள ஒரு பள்ளியில் 12ஆம் வகுப்பு படித்துவந்தான். அவன் தன் ஆசிரியர் மூலமாக கிறிஸ்துவை அறிந்துகொண்டான். காலம்செல்ல செல்ல தன்னை முழுவதுமாய் கர்த்தருடையவனாகவே மாற்றினான். படிப்பு, படிப்பை விட்டால் தேவபாதம் என்று இருந்தான். பள்ளி இடைவேளைகளில் கூட தேவனை துதித்துக் கொண்டே இருப்பான். அரசின் முறை தேர்வு காலமும் வந்தது, தேர்வை தேவபெலத்தோடு சந்தித்தான். ஆனால் அம்மாணவனோ தேர்வில் தேர்ச்சி பெறாதவனாக அறிவிக்கப்பட்டான். அனைவரும் செய்தியைக் கேட்டு அதிர்ந்துபோனார்கள். அந்த மாணவனை கர்த்தருக்குள் நடத்தின ஆசிரியரும் மிகுந்த சோர்வுடன் தேவனை நோக்கி அபயமிட்டுக் கொண்டிருந்தார். என்னவாயிற்றோ என்ற கலக்கத்தோடு அந்த

மாணவனுடைய வீட்டிற்கு போய் பார்த்த போது, அந்த சூழ்நிலையிலும் அவன் தேவனை துதித்துக் கொண்டிருந்தான்.




நண்பர்களும் ஊராரும் நீ இந்த தேவனை துதித்ததினால் என்ன பெற்றாய், இன்று நீ அவமானப்பட்டு நிற்பதுதான் மிச்சம் என்று கடிந்து கொண்டனர். ஆனால் அவனோ, நான் துதித்தால் தேவன் நன்மை செய்வார் என்று எந்த உள்நோக்கத்துடனும் நான் அவரை துதிக்கவில்லை. அவர் துதிக்கப்பட தக்கவராய் இருப்பதினால், எல்லா வேளையிலும் அவர் எனக்கு போதுமானவராய், என் தேவைகளை கூட நான் சொல்லும் முன்னே அறிந்தவராகவும் இருக்கிறார். தன்னையே எனக்காக கொடுத்த தேவனுக்கு, எனக்கு எதை எப்போது கொடுக்க வேண்டும் என்பதையும் அவர் அறிவார் என்றான்.

இதை கவனித்துக்கொண்டிருந்த அந்த ஆசிரியர் மறுகூட்டல் கேட்டு விண்ணப்பத்தார். ஆனால் முடிவு வந்தபோதோ எல்லோருக்கும் அதிர்ச்சி காத்திருந்தது. அவன் தான் மாநிலத்திலேயே முதலாவதாக மதிப்பெண் பெற்றவனாயிருந்தான். அவனுக்கென நடத்தப்பட்ட பாராட்டு விழாவிலும் இது என்னால் ஆனதல்ல, என் தேவனாலேயே இது சாத்தியமாயிற்று என்று சாட்சி கூறி அங்கும் தேவ நாமத்தை துதித்து மகிமைபடுத்தினான்.



என் அருமை தேவ ஜனமே, ஆரம்பத்தில் அந்த மாணவனுக்கு வந்த தோல்வி என்னும் மாயை, அவனை அவன் கிராமத்தில் மட்டும் வெட்கத்தை கொண்டுவருவதைப் போல காணப்பட்டாலும், அவன் நாவில் எப்போதும் இருந்த துதியானது அவனை தேசமே மகிமைபடுத்தும் படியாகவும், அவனால் பின் தேவனுடைய நாமமும் மகிமைபடும்படியாகவும் மாறினது. அவன் தன் எல்லா சூழ்நிலையிலும் கர்த்தரை துதித்ததினாலேயே மாத்திரம் இது சாத்தியமாயிற்று. இன்றும் நம் சூழ்நிலை என்னவாய் வேண்டுமானாலும் இருக்கலாம், நாம் அதையே நோக்கிக் கொண்டிராதபடி, கர்த்தரை தேடுவோம், அவரையே நோக்கிப் பார்ப்போம், அவரிடமாய் மட்டுமே ஜெபத்தில் கேட்ப்போம். எல்லாவற்றிற்கும் மேலாய் அவரை துதிக்கும் துதி எப்போதும் எல்லா சூழ்நிலையிலும் நம் வாயிலிருக்கும்படி தீர்மானிப்போம். நாம் ஒன்றிலும் நாம் குறைவுபட்டு போகாதபடி கர்த்தர் நம் தேவைகளை எல்லாம் பொறுப்பெடுத்து, ஆசீர்வதித்து, பாதுகாத்து, வெட்கப்படுகிற சூழ்நிலையை நீங்கள் காணதபடி, உங்களை வெட்கப்படுத்த நினைத்தோர் முன்னிலையில் உங்கள் தலைகளை உயர்த்தி, வழிநடத்தி, நிலைநிறுத்துவார்.

தாவீது ஆண்டவருடைய சமூகத்தில் துதித்து ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டான். ஆடுகள் பின்னாக செல்லும் போதும் ஆண்டவரை துதித்து மேன்மையை பெற்றுக்கொண்டான். அதேபோன்று அரண்மனையில் இருக்கும்போதும் ஆண்டவரை குதிக்க மறக்கவில்லை. உடன்படிக்கை பெட்டிக்கு முன்பாக சணல்நூல் ஏபோத்தை அணிந்து கொண்டு நடனம் ஆடி துதித்து ஆண்டவரை மகிமைப்படுத்தினான். மேலும் தனக்கு வந்த துன்பத்தின் நடுவிலும் ஆண்டவரை துதித்து மகிமைப்படுத்தி ஆண்டவருடைய வாயில் இருந்து " என் இருதயத்திற்கு ஏற்றவன்" என்ற நல்ல மதிப்பை பெற்றுக்கொண்டான். ஆதலால எனக்கன் பானவர்களே நாமும் துன்பத்தின் நடுவிலும், வாழ்ந்திருக்கும்போதும், தாழ்ந்திருக்கும் போதும்' எபபோதும் எவ்வேளையும் ஆண்டவரை துதித்து மகிமைப்படுத்தி கிருபையையும், ஆசீர்வாதத்தையும் பெற்று தேவனுக்காக எழும்புவோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

Dear beloved in Christ,

Greetings to you all in the name of our Lord Jesus Christ who opens the door that no man can shut and shuts the door that no man can open. Let us praise the Lord of lords who led us for the past three months and enabled us to see the fourth month.

"I will extol the LORD at all times; His praise will always be on my lips."

- Psalms 34:1

We can praise and extol the Lord always only if we completely know that nothing happens in our life without God's permission.

The psalmist says that His praise will always be on his lips. But how are we now? Even when there is a small trouble, we start murmuring. Are we praising God? Or are we cursing God? A person who praises will always be victorious.

In a village in Maharashtra, there lived a poor boy. He was studying 12th grade in the school that was in that village. He accepted Jesus as his saviour through his teacher. As days passed, he totally became God's child. Studying and reading scriptures were his daily duties. He used to praise God even during the break periods in his school. Government exams were nearing. He performed well in his exams with God's strength. But the results showed that he failed in those exams. Everyone was shocked on hearing this. The teacher who led him to Christ was also praying with much sadness. The teacher went to that boy's home to console him. But the boy was praising God at that time too. The villagers and his friends were shouting at him. They said what good thing did you get by praising this God, you have just failed in your exams. The boy replied, 'I do not praise God so that He will do good things in my life. I praise Him, because He is worthy to be praised, I praise Him because He is more than enough for me in all situations, He is a God who knows my needs even before I utter a word. The God who gave Himself for me knows when to give and what to give.'

The teacher who listened to this, applied for re-evaluation of the failed paper. There was a surprise waiting for all when the results came. He got first rank in the whole state. In the felicitation ceremony, he praised God there by saying that he had achieved all these only through His God's grace.

My beloved people of God, though the failure looked like a disgrace for the boy in his village, the praise that he kept on his lips made him victorious throughout the nation and through that God was glorified. This was possible only because he praised God in all situations. Today whatever may be our situation, let us not look into it, rather let's seek God and look unto Him, and keep our requests only in prayer.




Above all, let us firmly decide to keep praising His name at all times. The Lord will take care of our needs so that we'll not lack anything, will bless us, will protect us and will lift our heads among the people who look down us, will lead us and will establish us. David praised God in His presence and got blessed. Even when he was a shepherd, he praised God. In the same way, he didn't forget to praise God when he was in the palace as a king. David danced before the Lord with all his might, wearing a priestly garment. Amidst all troubles he praised God and so he was called as 'A man after God's own heart'.

So my dear people, beloved in the Lord, let us praise God in our sad days, happy days and even admist our troubles and receive His grace and blessings and rise up for Him. May God bless you. Amen!

# திருவசன ஊழியம்

## MEMORY VERSES 2021

**04-04-2021**

### உயிர்த்தெழுதலை கொண்டாடுதல்

நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். - கொலோசெயர் 3:1

**04-04-2021**

### Celebration of Resurrection

So if you have been raised with Christ, seek the things that are above, where Christ is, seated at the right hand of God.

- Colossians 3:1

**11-04-2021**

### உயிர்த்த ஆண்டவரை சந்தித்தல்

அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான்.

- அப்போஸ்தலர் 9:6 (மு)

**11-04-2021**

### Encountering the Risen Lord

So he, trembling and astonished, said, "Lord, what do you want me to Do?"

- Acts 9:6 (a)

**18-04-2021**

### உழைக்கும் இடத்தில் கிறிஸ்து

அப்பொழுது போவாஸ் பெத்லெகேமிலிருந்து வந்து, அறுக்கிறவர்களைப் பார்த்து: கர்த்தர் உங்களோடே இருப்பாராக என்றான்; அதற்கு அவர்கள்: கர்த்தர் உம்மை ஆசீர்வதிப்பாராக என்றார்கள். - ரூத் 2:4

**18-04-2021**

### Christ in Work Place

Just then Boaz came from Bethlehem. He said to the reapers, “The LORD be with you.” They answered, “The LORD bless you.”

- Ruth 2:4

**25-04-2021**

### கிறிஸ்துவில் புதிய சமுதாயம்

விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது.

- அப்போஸ்தலர் 4:32

**25-04-2021**

### New Society in Christ

Now the whole group of those who believed were of one heart and soul, and no one claimed private ownership of any possessions, but everything they owned was held in common.

- Act 4:32

# அனுதின வேத வாசிப்பு பகுதி

| ஏப்ரல் | | | | |
|---|---|---|---|---|
| தேதி | காலை | காலை | மாலை | மாலை |
| 1 | உபா 18:1 - 20:20 | நீதி 12:10 | லூக் 9:28-50 | சங் 73:1-28 |
| 2 | உபா 21:1 - 22:30 | நீதி 12:11 | லூக் 9:51 – 10:12 | சங் 74:1-23 |
| 3 | உபா 23:1 - 25:19 | நீதி 12:12-14 | லூக் 10:13-37 | சங் 75:1-10 |
| 4 | உபா 26:1 – 27:26 | நீதி 12:15-17 | லூக் 10:38 – 11:13 | சங் 76:1-12 |
| 5 | உபா 28:1-68 | நீதி 12:18 | லூக் 11:14-36 | சங் 77:1-20 |
| 6 | உபா 29:1 – 30:20 | நீதி 12:19-20 | லூக் 11:37 – 12:7 | சங் 78:1-25 |
| 7 | உபா 31:1 – 32:29 | நீதி 12:21-23 | லூக் 12:8-34 | சங் 78:26-45 |
| 8 | உபா 32:30 - 52 | நீதி 12:24 | லூக் 12:35-59 | சங் 78:46-58 |
| 9 | உபா 33:1-29 | நீதி 12:25 | லூக் 13:1-22 | சங் 78:59-72 |
| 10 | உபா 34:1 – யோசு 2:24 | நீதி 12:26 | லூக்13:23 – 14:6 | சங் 79:1-13 |
| 11 | யோசு 3:1 – 4:24 | நீதி 12:27-28 | லூக்14:7-35 | சங் 80:1-19 |
| 12 | யோசு 5:1 – 7:15 | நீதி 13:1 | லூக்15:1-32 | சங் 81:1-16 |
| 13 | யோசு 7:16 – 9:2 | நீதி 13:2-3 | லூக் 16:1-18 | சங் 82:1-8 |
| 14 | யோசு 9:3 – 10:43 | நீதி 13:4 | லூக் 16:19 17:10 | சங் 83:1-18 |
| 15 | யோசு 11:1 – 12:24 | நீதி 13:5-6 | லூக் 17:11-37 | சங் 84:1-12 |
| 16 | யோசு 13:1 – 14:15 | நீதி 13:7-8 | லூக் 18:1-17 | சங் 85:1-13 |
| 17 | யோசு 15:1-63 | நீதி 13:9-10 | லூக் 18:18-43 | சங் 86:1-17 |
| 18 | யோசு 16:1 – 18:28 | நீதி 13:11 | லூக் 19:1-27 | சங் 87:1-7 |
| 19 | யோசு 19:1 – 20:9 | நீதி 13:12-14 | லூக் 19:28-48 | சங் 88:1-18 |
| 20 | யோசு 21:1 – 22:20 | நீதி 13:15-16 | லூக் 20:1-26 | சங் 89:1-13 |
| 21 | யோசு 22:21 – 23:16 | நீதி 13: 17-19 | லூக் 20:27-47 | சங் 89:14-37 |
| 22 | யோசு 24:1-33 | நீதி 13:20-23 | லூக் 21:1-28 | சங் 89:38-52 |
| 23 | நியா 1:1 – 2:9 | நீதி 13:24-25 | லூக் 21:29 – 22:13 | சங் 90:1- 91:16 |
| 24 | நியா 2:10 – 3:31 | நீதி 14:1-2 | லூக் 22:14-34 | சங் 92:1 – 93:5 |
| 25 | நியா 4:1 – 5:31 | நீதி 14:3-4 | லூக் 22:35-54 | சங் 94:1-23 |
| 26 | நியா 6:1-40 | நீதி 14:5-6 | லூக் 22:55 – 23:10 | சங் 95:1 – 96:13 |
| 27 | நியா 7:1 – 8:16 | நீதி14:7-8 | லூக் 23:11-43 | சங் 97:1 – 98:9 |
| 28 | நியா 8:17 – 9:21 | நீதி 14:9-10 | லூக் 23:44 – 24:12 | சங் 99:1-9 |
| 29 | நியா 9:22 – 10:18 | நீதி 14:11-12 | லூக் 24:13-53 | சங் 100:1-5 |
| 30 | நியா 11:1 – 12:15 | நீதி14:13-14 | யோவா 1:1-28 | சங் 101:1-8 |

# லூக்கா

## I. ஓரிரு வார்த்தைகளில் விடையளி (Answer in a word or two)

1. கர்த்தர் யாருடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார்?
The Lord has been mindful of whose humble state?

2. மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்று கூறியது யார்
Who said that a great prophet has appeared among us?

3. பரலோகத்தில் எவைகளை சம்பாதித்து வைக்க வேண்டும்?
What should you treasure up in heaven?

4. லூக்கா சுவிசேஷத்தில் மட்டும் காணப்படும் உவமைகள் ஏதேனும் 2 மட்டும்.
State 2 parables that are only found in the gospel of Luke.

5. லூக்காவில் மொத்தம் எத்தனை வசனங்கள் உள்ளன?
Totally how many verses are found in the Gospel of Luke?

6. லூக்கா சுவிசேஷத்தில் எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது?
What is given more importance in the Gospel of Luke?

7. கலிலேயருடைய இரத்தத்தை அவர்களுடைய பலிகளோடு கலந்தது யார்?
Who had mingled the blood of Galilaeans with their sacrifices?

8. ஒருவருக்கொருவர் பகையாய் இருந்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் மூலம் நண்பர் ஆனவர்கள் யார்?
Who became friends through Jesus Christ though they had been enemies before?

9. இயேசு கிறிஸ்து நரி என்று யாரை குறிப்பிடுகிறார்?
Whom did Jesus call as fox?

10. கடைசி நாட்களில் நடக்க போவதை பழைய ஏற்பாட்டில் இவருடைய நாட்களில் நடந்ததை மேற்கோள் காட்டியுள்ளார். யாவர்?
What is going to happen in the last days, he quoted from the Old testatment as what happened in their days. Who are they?

11. இயேசு கிறிஸ்து தான் எதற்காக அனுப்பப்பட்டதாக கூறுகிறார்?
Jesus says for what he was sent for?

12. மூன்று வருடம் சுற்றி சுற்றி வந்து வருமானம் ஏதும் இல்லை என்று வருடம் ஒன்று கூட்டி கொடுத்து வருவேன் என்று திரும்பி சென்றது யார்?

Who went around for three years but found no income so added one more year and returned saying he will come back?

13. தீர்க்கதரிசியை பார்க்கிலும் மேன்மையுள்ளவன் என்று இயேசு யாரை குறிப்பிடுகிறார்?

Who is referred by Jesus as "one who is more than a prophet"?

14. நேரியின் குமாரன் யார்?

Who is the son of Neri?

15. உலகமே ஏற்று கொண்டாலும் சொந்தத்தில் ஏற்று கொள்ள படாதவன் யார்?

Who is accepted by the world but not by his own?

## BIRTHDAYS

4 April - Mr. Bestlin Louis
7 April - Baby. Kezia Jane Stephen
7 April - Mr. Saravanan
12 April - Mr. Wilson
13 April - Mr. Anose V T
14 April - Mrs. Jebin Danphia
14 April - Master. Dylan Arthur Daniel
16 April - Mrs. Femina
18 April - Mrs. Jasmine







## WEDDING DAY

19 April - Mr. & Mrs. Edwin Christopher

*பிறந்த நாள் மற்றும் திருமண நாளுக்கான வாக்குத்தத்தம்:*

**நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.**

*ஏசாயா 41:10*

**Fear thou not; for I am with thee: be not dismayed; for I am thy God: I will strengthen thee; yea, I will help thee; yea, I will uphold thee with the right hand of my righteousness.**

*Isaiah 41:10*

# ஏப்ரல் மாத நிகழ்வுகள்

| தேதி | நேரம் | ஆராதனை |
|---|---|---|
| 1.04.2021<br>Thursday | 7:30 PM | பெரிய வியாழன் திருவிருந்து ஆராதனை |
| 2.04.2021<br>Friday | 11:30 AM | பெரிய வெள்ளி ஆராதனை |
| 4.04.2021<br>Sunday | 7:00 AM | ஈஸ்டர் பண்டிகை திருவிருந்து ஆராதனை |
| 11.04.2021<br>Sunday | 8:00 AM | ஞாயிறு ஆராதனை |
| 14.04.2021<br>Friday | 6:00 PM | Mr. Kishan அவர்கள் இல்ல ஜெபக் கூட்டம் ஆலயத்தில் வைத்து |
| 18.04.2021<br>Sunday | 8:00 AM | திருவிருந்து ஆராதனை |
| 25.04.2021<br>Sunday | 8:00 AM | துதி ஆராதனை உபவாச ஜெபம் |

## குறிப்பு:

வேதாகமத் தேர்வு முழுதாளில் எழுதி அனுப்ப வேண்டிய கடைசி நாள்:

**25.4.21**

உங்களுக்காக ஜெபிக்கும்

**Rev. S. சௌந்திரபாண்டியன்**

சேகர குரு

புனே சேகரம்